**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**
**தேதி: 02.12.2025**
**OS. No. 64/2022**
**வழக்கு சாட்சி PW1.– வெத்தியாண்டி த/பெ. பழனியப்பன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி வக்கீல் தயார் செய்தார். நிரூபண வாக்குலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என் வக்கீல் முன்னிலையில் நான் கையெழுத்து செய்தேன் . நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் . என்னுடைய நிலத்தில் தகராறு செய்த காரணத்தினால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் . இடத்தில் தகராறு செய்த சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது. நான் தான் காவல் நிலையத்தில்புகார் கொடுத்தேன். வேறு யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை . தாவா சொத்தின் கிழக்கே எனது முதலாளி ராம் மூர்த்தி உள்ளார். மேற்கே பிரதிவாதிகளும், வடக்கே ரவுசன் என்பவரது நிலமும் , தெற்கே ஹார்ட் வெல் காம்பவுண்டு உள்ளது. பிரதிவாதிகள் ஹார்ட் வெல் காம்பவுண்டு தான் வசித்து வருகிறார்கள் . நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தாவா சொத்தின் சர்வே எண் 26 ஆகும்.

பிரதிவாதிகளின் சர்வே எண் விவரம் எனக்கு தெரியாது . தாவா சொத்து எனக்கு நான் வேலை செய்ததின் அடிப்படையில் எனக்கு எழுதி

கொடுக்கப்ட்ட சொத்தாகும். எனக்கு எட்டே கால் செண்ட் எழுதி கொடுக்கப்ட்டது. தாவா சொத்தின் பட்டா என் பெயரில் தான் உள்ளது . எனக்கு எட்டே கால் செண்டே டாக்டர் ராமமூர்த்தி எழுதி கொடுத்தார் . தாவா சொத்து எந்த தேதி, எந்த வருடம் எழுதி கொடுத்தது என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை . தாவா சொத்தை எனக்கு தானமாக எழுதி கொடுத்தார். டாக்டர் ராமமூர்த்தி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது . தாவா சொத்திற்க்கு உள்ள வீட்டிற்க்கு மின் இணைப்பு, வீட்டு வரி, குடி நீர் வரி உள்ளது அனைத்தும் என் பெயரில் தான் உள்ளது . ஹார்ட் வெல் காம்பவுண்டு கோட்டை சுவர்தான் எனக்கு பிரச்சனை என்றால் என்னுடைய பாதையில் தகராறு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். கோட்டைச்சுவர் கட்டியதுதான் பிரச்சனையாகும்.

கோட்டைச்சுவரை பொதுவழியில் கட்டினார்கள் என்றால் இல்லை , கோட்டைச்சுவர் கட்டிய இடம் பட்டா நிலமாகும் . நான் சொல்லும் பாதைப்பகுதியானது வெகு நாட்களாக உள்ளது . எனக்கு சொத்தினை எழுதி கொடுத்த டாக்டர் ராமமூர்த்தியின் ஆவணத்தில் நான் கூறும் பாதையானது குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை . கோட்டைச்சுவரை கட்டியது காண்ட்ராக்டர் உதவியுடன் நான்தான் கட்டினேன். நான் கோட்டைச்சுவர் எழுப்பும் முன்பு சுவர் ஏதேனும் அங்கு இருந்ததா என்றால் இல்லை , முள்கம்பி வலைதான் இருந்தது . பொதுவழியில் கோட்டைச்சுவர் கட்டினால் தவறு என்றால் நான் கட்டியுள்ள கோட்டைச்சுவர் பொதுவழிப்பகுதியல்ல . பக்கத்து நிலமான ஹார்ட்வெல் காம்பவுண்ட்டுக்கு தனி பாதை உள்ளதா என்றால் உள்ளது .

ஹார்ட்வெல் காம்பவுண்டானது 8 ஏக்கர்க நிலமாகும், சுத்தி வேலி போட்டுள்ளது, சில இடங்களில் கம்பியும் , சில இடங்களில் சுவரும் உள்ளது.

என்னிடம் காட்டப்படும் (புகைப்படம்) வா.சா.ஆ.17 ஆவணமானது 3 வது புகைப்படத்தில் உள்ள பெரிய கேட் மற்றும் சிறிய கேட் ஹார்ட்வெல் காம்பவுண்ட்டின் நுழைவு கேட்டுகள் என்றால் பெரிய கேட் மட்டும்தான் ஹார்ட்வெல் காம்பவுண்ட்டின் கேட் பகுதியாகும் , சிறிய ஹார்ட்வெல் காம்பவுண்ட்டின் பகுதியல்ல . என்னிடம் காட்டப்படும் மேற்சொன்ன புகைப்படத்தில் உள்ள 3 பில்லர்கள் ஹார்ட்வெல் காம்பவுண்ட்காரர்கள் கட்டினார்கள் , கடைசியில் உள்ள பில்லரானது ஹார்ட்வெல் காம்பவுண்ட் வேலைக்காரர்கள் என் இடத்தில் கட்டினார்கள். இந்த வழக்கு நான் வழிக்கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . இந்த வழக்கில் நான் வேறு பரிகாரங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.12 வரைபடத்தில் என்னுடைய நிலம் எங்குள்ளது என்றால் , எனக்கு அதில் விபரங்கள் தெரியவில்லை . என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.13 ஆவணமான சைட் பிளானில் உள்ள விபரங்கள் எனக்குத்தெரியும். அந்த ஆவணத்தில் ரோடு பகுதி எங்கு உள்ளது என என்று கேள்வி எழுப்பியபோது சாட்சி சாலைப்பகுதியை தொட்டுக் காண்பித்தார் . அந்த வரைபடத்தில் உள்ள சாலையின் வடக்கு புறம் ஹார்ட்வெல் காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.15 ஆவணமான போலீஸ் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள மீனா சங்கர் எனது மருமகள் ஆவார் . தாவா சொத்து சம்பந்தமாக எனது மருமகள் புகார்

கொடுத்துள்ளாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனக்கு இடம் கொடுக்கப்பட்டபோது சர்வேயர் கொண்டு அளந்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . தாவா சொத்து அளந்து கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அதன் உட்பிரிவு என்ன என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண் விபரம் எனக்கு நினைவில்லை . பிரதிவாதியின் சர்வே எண் வேறு , என்னுடைய சர்வே எண் வேறு என்றால் சரிதான் . பிரதிவாதிக்கு சம்பந்தமான சர்வே எண் .12–ல்தான் நான் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான் . என் சொத்து விபரத்தை தெளிவுப்பட விளக்கும்பொருட்டு நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்ககோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . பிரதிவாதிகள் என் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல . சர்வே எண் .12 தொடர்பாக எனக்கு எந்தவிதமான கோரிக்கையும் இல்லை என்றால் சரிதான் . என்னுடைய சர்வே எண்ணில் பிரதிவாதிகள் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல . நான்தான் பிரதிவாதிகளின் இடத்தை அபகரிக்கவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.12.02 18:17:33 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.